சிங்கார சேஷ்டைகள்

28

ஆசிரியர் :

வி. கே. வேங்கடசுப்ரமண்யம்.

[விலை 8 அணா]

74

631

1950.

‘சுவை அறிமுகம்’.

‘அசல் அஸ்கா சர்க்கரைதான்! என்று வியாபாரி சொன்னாலும் ‘‘அதில் கொஞ்சம் சாம்பிள் கொடுங்கோ சார்!’ என்று அம்பி கேட்கின்றான்! அசல் அறிவு வளர்வதுபோல் போலி அறிவும் வளர்ந்து வருகின்றது இக்காலத்தில்! ஆகவே சரக்கின் திறனறிய சாம்பிள் கொடுக்கவேண்டியது அவசியம்தான்!

சிருங்கார சேஷ்டைகளை சாம்பில் கொடுப்பது எப்படி? புத்தகத்தில் கவிகளால் விளக்கப்படும் சிருங்கார சேஷ்டைகள் தானல்லவா? எனவே உணர்ச்சி கொண்டு அவைகளை அறியும் முறையை மட்டும், இங்கு சிறிது கூறுவோம். இந்த சாம்பிள் ‘‘சுவையறிதற்குப்’’ போதுமான அறிமுகமாகலாம்.

சூரிய ஒளி, கொடி செடிகளையும் (ஏன்?) சகல உயிர்ப்பிராணி களையும் வளர்த்தல் உலகப் பிரசித்தம், அதுபோல் நிலா வெளிச்சம் குட்டையான குழந்தைகளை நெட்டையாக வளரச்செய்வதிலும், தலை உரோமங்களை நீண்டு மெல்லியனவாகத் துலங்கச்செய்வதிலும் திறமை கொண்டதாம். இது நவீன ஆராய்ச்சியாளர்களின் அபிப் பிராயம்.

இதுபோல் மனிதர்களின், அறு சுவையறியும் திறமை அவர் களின் தூல உடம்பை வளர்க்கவும் அதை ஆரோக்கியமாகப் பாதுகாக்கவும் உதவுவனவாம். ஆனால் காவியங்களிலும் பிற கலை களிலும் அமைந்த சுவையறியும் திறமை அவர்களின் அறிவை யும், ஆனந்தத்தையும் ஆயுளையும்கூட பன்மடங்கு நுட்பமாக வளர்ப் பனவாம்.

அச்சுவைகளாவன: 1 சிருங்காரம், 2 வீரம், 3 கருணை, 4 அற்புதம், 5 ஹாஸ்யம், 6 பயம், 7 அருவருப்பு, 8 கோபம் 9 சாந்தம் என்பனவாம்.

உதாரணமாக: சிங்காரத்தைச் சீதையின் மணத்திலும் வீரத்தை வில் முறிக்குங்காலையிலும், கருணையை காகாசுரன் சங்கதியிலும், அற்புதத்தை கடலின் அணையிலும், ஹாஸ்யத்தை சூர்ப்பணகைச் செய்தியிலும், பய உணர்ச்சியை சமுத்திர ராஜன் மீது செய்த சீற்றத்திலும், அருவருப்பை ராவணனுடன் செய்த போர்க்களத்திலும், இரௌத்ரச்சுவையை இராவணனது சங்காரத்திலும், சாந்த (ஆனந்த)த்தை முனிவர்—நல்லோரது—பாதுகாப்பிலுமாக, இராமாயணத்தில் நவரசங்களும் மிளிரக் காண்கின்றோம். இதுபோன்ற நவரசத்துடன் சித்திரக்கலையில் இன்னும் இரண்டு சுவையை அதிகமாக அனுபவிக்கலாம். அவை:—பிரத்தியட்ச ரசம், பிரேமை ரசம் என்பன.

புதையல் கிடைத்தல், அழகான குழந்தையை பெறுதல் அந்தரங்கக் காதலரைக் காணல், இவற்றால் உண்டாகின்ற மயிர்க் கூச்செறிதல், பிரேமைச் சுவையின் அறிகுறி. பிரத்தியட்சம் என்பது கண்ணுக்கு நேராகப் பார்த்துமகிழும் உணர்ச்சி என்று போஜராஜன் மானஸோல்லாசத்தில் எழுதுகின்றார். தற்காலம் எழுதப் பெறுகின்ற நூல்களிலும் சித்திரங்களிலும் இத்தகைய சுவைகளும் அபிப்பிராய (பாவ)ங்களும் அமைந்திருக்கின்றனவா என்று கவனித்தல் நாட்டின் முன்னேற்றத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் இன்றியமையாதது.

இதுபோல், உலகத்திலுள்ள கலைகளை எல்லாம் அபிநயத்தின் மூலமாக—நடிப்பின் மூலமாக—விளக்குவது பரதநாட்டிய கலையாகும். அதில் உயிர்போன்றன 28 சிங்காரசேஷ்டைகள் என்று சுக்ரநீதி (அதாவது) பொருளாதார சாஸ்திரம் அறிவிக்கின்றது. உலகத்தின் பொருளையும் உயிரையும் படைப்பது, வளர்ப்பது இக்கலையாகும். எனவே அரசன் முதல், தொழிலாளர், அறிவாளர் யாவரும், ஆண் பெண் அடங்கலும் இக்கலையை அறிந்திருக்க வேண்டுமென்று இந்திய அரசியல் நூலான சுக்ரநீதி வற்புறுத்துகின்றது.

பரத நாட்டிய கலை இளமையையும், ஊக அறிவையும் வளர்க்கின்றதென்பது தெளிவு. தமிழ் நாட்டில் பரதநாட்டிய கலை வளர்க்கப்பட்டு வருகின்ற தற்காலத்தில் 28 சிங்கார

S 163120

சேஷ்டைகளின் இலக்கணத்தையும் அழகான உதாரணங்ளுடன் விளக்குகின்ற இச் சிறிய நூலை, ஒரு மதிப்பு மிகுந்த இரத்தினமெனக் கூறலாம். இந் நூலைப் படிக்குமன்பர்கள் --ரஸிக தம்பதிகள்—சுவையறிவு மிக்க சந்தானங்களை—அறிவுக் களஞ்சியங்களான குறிப்பறியுங் குழந்தைகளைப் பெற்று மகிழ் வார்களென்பது திண்ணம். இந்த இருபத்தியெட்டு சேஷ்டைகளில் நடிக்கத்தக்கன எவை? சுவையோடு மனத்தினுல் மட்டும் அனுபவிக்கத் தக்கன எவை என்ற கேள்விக்கு விடையளிக்கும் உரிமை, ரசிகர்களைச் சார்ந்ததாம்!

பரத நாட்டிய கலையில் ஆவல் எல்லோருக்கும் இருக்கலா மாயினும், ஹஸ்தம், பூசம், அவிட்டம், கேட்டை, இரேவதி, சதயம், உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி என்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களே அக்கலையில் நிபுணர்களாக விளங்குவார்களாம். இது போலவே, லக்கினத்தில் புதனும் அல்லது புதன் வீட்டில் சந்திரனும் இருக்கும்பொழுதும் புதனது வீட்டை குரு பார்க்கும் பொழுதும் பிறந்த குழந்தைகளுக்கு அல்லது அவ்விதம் கிரகங்கள மைந்திருக்கும் காலத்தில் நடன கலை தொடங்கும், மாணவ மாணவிகளுக்கும்தான் மிகுந்த புகழும் செல்வமும் உண்டாகு மென்று சோதிட நூல்கள் கூறுகின்றன. இப்புத்தகத்தை தமிழ் நாட்டினருக்கு அளிப்பதன் மூலமாக ஒரு ஒப்பற்ற கலை விருந்து புரியும் அன்பர் ஸ்ரீ V. K. வெங்கடசுப்பிரமணியம் அவர்களே இந்த பரதநாட்டியம் முதலிய கலை பயிலுதற்குரிய நட்சத்திர ராசி கிரக அமைப்புகளை குறித்தும் ஒரு நூல் வெளியிடுவார்களானுல் மிக மிகப் பேருதவியாகும்.

இப்படிக்கு:

சென்னை
2—8—50.

பண்டித T. K. ராமபத்ர சர்மா,
வித்யா வாரிதி.

படிக்கின்ற நேயர்களுக்கு ஒரு வாக்கு !

——:0:——

சுவையோடு பருகும் பானகத்தில்–பாயசத்தில்–சிறு துரும்பு எப்படியோ வந்து கொள்ளுகின்றது! பருகுவோர் அதனை ஒதுக்குதல் இயற்கை! அதுபோல், இந்த சிருங்கார சேஷ்டைகளிலும் சில பிழைகள் புகுந்துகொண்டன ! அவற்றை ரசிகர்கள் பின் வருமாறு திருத்தமாகப் படித்துச் சுவைக்கவேண்டுகின்றோம்.

பக்கம்	வரி	திருத்தங்கள்
4	2	அவளது பொன்மேனி
,,	15	'ப்ராகல்ப்யம்'
6	27	விரதங்கொண்ட மேலோர்
8	2	விரக வேதனையை
,,	25	கோவைக்கனியைப் பழிக்கவே
9	15	விச்சித்தியாம் !
,,	22	வேண்டுமென வேண்ட
,,	28	அழகு பெறுகின்றன !
11	1	செய்வதெல்லாம்
12	9	காற்றின் வழியாக
14	10	பரபரப்பு !
,,	23	கொங்கைகளின்
17	27	அலங்காரம் என்று பெயராம் !
18	5	அரச குமாரனாகிய
,,	11	வாயில் ஜன்னல் வரை
20	4	தனது காதலியினது
,,	26	பெருமூச்சினால் அவள்

சிங்கார சேஷ்டைகள்!

28?

[ஆண்களுக்கான கலைகள் 64-ல் காம சாஸ்திரம் என்ற பகுதியில் விளக்கப்படும் சிங்கார சேஷ்டைகள் வேறு. அவை 'இந்துமதியினது சுயம்வரத்திற்கு விஜயஞ் செய்த அரச குமாரர்களிடம்' காணப்பட்டதாகக் காளி தாஸ மகாகவி கூறுகின்றார். மாதர்க்குரிய மனோஹரக் கலைகள் 64-ல் இன்ப நூற் பகுதியிலே விளக்சப்படும் சிங்காரச் செயல்கள் வேறு. இங்கு தெரிவிக்கின்ற சிங்கார சேஷ்டைகள் வேறு! இவை 'பரதநாட்டியத்தைச் சார்ந்தன' என்று சுக்ரநீதி ஆசிரியர் தெரிவிக்கின்றார்.]

இவை பாவம் (கருத்து வெளியீடு) தொடங்கி, குதூஹலம் என்ற பகுதி வரை விளக்கப்படுகின்ற 18 விதச் செய்கைகள் என்பர் சிலர். வேறு சிலர் லளிதம் முதல் கேளி வரை விரிந்துள்ள பத்தையும் சேர்த்து 28 என்பர்.

1. பாவம்

பிறந்தது முதல் அது வரை கண்டறியாதது போலும் அப்பொழுதுதான் 'புதிதாகத் தோன்றுகின்றது போலும்' உண்டாகின்ற உணர்சிக்கு பாவம் என்று பெயர். உதாரணமாக: 'அதே தென்றல் காற்றுதான்; அதே மல்லிகை மலர்தான்; அதே பெண்தான்; ஆனாலும் அப்பருவகாலத்தில் பார்க்கும்பொழுது, அதது புதிதாக-வேறாகவே தோன்று கின்றது! அந்த உணர்ச்சியை மனத்தினால் அனுபவிப்பது தான் பாவம் என்பது.

2. ஹாவம்

இது, முன் மனதில் பதிந்த பாவம் என்ற உணர்ச்சியே இன்னும் சிறிது அங்க சேஷ்டைகளால் வெளிவருவதாகும்.. அதாவது: புருவ அசைவு, கண் ஜாடை முதலியவைகளால் சம்போக விருப்பம் வெளியாதல். பார்வதி இதனைத் தனது மயிர்க் கூச்செறிதலால் வெளியிடலாயினள் என்பது காளிதாஸ வாக்கு.

3. ஹேலை

இது, முன் குறித்த இரண்டு நிலைகளையுந்தாண்டி 'தீவிரமான சம்போக ஆசையைக் குறிக்கும்' செய்கை.

4. சோபை

இது, யௌவனப் பருவம் வளருந்தோறும் உண்டாகின்றன அழகு. இதை வளரிளமை என்பர் தமிழர். ஏறி வருகின்ற யௌவன அழகு என்பர் வட நூலார். ஆரூட யௌவனம், என்பதும் அதுதான். உதாரணம்: பதினாறு வயதுள்ள யௌவனப் பருவம் வாய்ந்தவள்; பார்க்குந் தோறும் மனோஹரமான மலர்மேனி; அதனை அழகிய ஆடையாபாரணங்களாலும் சந்தனம் குங்கமப்பூ முதலிய நல் வாசனைப் பொருள்களாலும் ரோஜாமலரினாலும் அலங் கரித்துக்காணுங்காலுண்டாகும் அழகுதான் அசல் சோபை! அவ்வித சோபாங்கிகளைக் காணுங்கால், மன்மதன் தனது அம்புகளை வெறுத்துக் கீழே எறிகின்றானாம்! என் தெரியுமா? தனது அம்புகள் செய்யத் தக்க வேலைகளைப் பார்க்கினும் பன்மடங்கு வேலைகளை அவ்வழகிய உருவமே செய்யும்பொழுது, தனது பாணங்களுக்கு வேலையில்லை என்று கருதித்தான்!

காந்தி

சோபையின் அழகிய மலர்ச்சியே காந்தி யெனப் படுகின்றது. உதாரணம்: அவளது கண்கள் கருங் குருவிளை வென்றன! கைகளிரண்டும் தாமரை மலரழகை மறக்கச் செய்தன! உருண்டு திரண்ட கொங்கைகளிரண்டும் சிறந்த மத யானையின் மத்தகங்களைப் போலும் மனத்தை யிழுக்கின்றன! அவளது கடைக்கண் பார்வைகள் அநேக மன்மத பாணங்களை ஏக காலத்தில் படைத்து விடுகின்றன!

மாதர்களின் இந்த அழகிய யௌவன நிலையைத்தான் கவிகள் 'காந்தி நிலை' என்று பெயரிட்டு அழைக்கின்றனர்.

6. தீப்தி

தீப்தி என்றால் ஒளி: சுடர் விட்டுப் பிரகாசிக்கும் அழகு! அந்த யௌவனப் பருவத்தின் காந்தி 'லாவண்யக் கொடி யின்' செல்வமாக வளர்ந்து, புன் சிரிப்பெனும் மொட்டு மிட்டு, பூமிக்கு ஓர் ஆபரணமெனவும் வாலிபர்களின் மனத்திற்கு வசீகரண யந்திரமெனவும் விளங்கும் மேலான நிலை தீப்தி! சோபையின் முதல் நிலையில் கண்ட அழகு, இங்கே மிகக் காந்தியுடன் சுடர்விட்டு விளங்கும் மூன்றாவது நிலை. சோபை, காந்தி, தீப்தி. ஆகிய மூன்றும் ஒன்றி லொன்று அதிக வளர்ச்சிபெற்ற அழகு நிலைகள்! சௌந்தரிய ஏணிப்படிகள்!

7. மாதுரியம்

இதன் பொருளே இனிமை வாய்ந்ததுதான்! அழகிய யௌவன மாதை எந்த நிலையில் கண்டாலும் இனிமை தோன்றுமாம் மனத்தினுக்கு! மனத்தினுக்கும் அழகாகத் தோன்றுவதை இனியதென்றுதான் சொல்லமுடியுமல்லவா? அந்தக் கண்வ முனிவர் கண் போல் வளர்த்த இள நங்கை

சகுந்தலை யென்பாள். பட்டினவாசப் பகட்டை யறியாது அக்காட்டிலேதான் வளர்கின்றாள்! அவளது பொன்மேனி இன்று காண்கின்ற பெங்களூர் பச்சைப் பட்டாடை போன்ற நற் சேலைகள் அணிந்திருந்ததா? அன்று! அத்திருமேனிக்கு அக்காட்டிலே கிடைத்த 'மரவுரி'தான் நல் ஆடை! ஆயினுமென்ன? தாமரை மலரையடுத்துப் பாசிக்கோத்துத்தான் இருக்கட்டுமே! அதனால் அத்தாமரை மலரின் அழகு குறைகின்றதா? சந்திரனிடத்தில் தோன்றும் களங்கம் பார்வைக்குக் கருப்புத்தானாயினும், அது சந்திரனுக்கு மிக அழகளித்துக் கொண்டே இருக்கின்றதன்றோ? அதுபோல் அழகான அங்கங்களுக்கு சுந்தராங்கிகளுக்கு-இயற்கையழகு சொட்டும் அங்கங்களமைந்த மாதர்களுக்கு-எதுதான் அழகு செய்வதில்லை?

8. ப்ரகல்பதை

சிறிதுகூட பரபரப்புக் காட்டாத தன்மை 'ப்ராகல்பயம்' அல்லது ப்ரகல்பதை எனப்படும். பரபரப்புக் காட்ட வேண்டிய சந்தர்ப்பம் என்ன வந்துவிட்டது, என்று கேட்கின்றீர்கள்? ஆண் மக்களாயின், அவசியம் பரபரப்புக் காட்டியே இருப்பார்கள் இந்த காரியங்களுக்கு! உதா: பாருங்கள்! காதலர்கள் தம் காதலிகளை எத்தனை முறை எத்தனை விதங்களாகக் கைகளால் கட்டுகின்றனர்? இதற்கு ஆலிங்கனம் செய்து கொள்ளுதல் என்று பெயராம்! இது போகட்டும்! முத்தமிடுவது என்றால் அதற்கும் ஒரு கணக்கு வேண்டாமா? இரயிலில் பிரயாணஞ் செய்யுங்கால் முத்தமிடுகின்ற இத்தாலியக் காதலர்க்கு அந்த நாட்டுச் சர்க்கார் மூன்று ஷில்லிங் அபராதம் விதிக்கின்றனராம்! அது போல் இந்த மாதர்கள் சுயராஜ்யம் பெற்ற இக் காலத்தில் தம் காதலர்க்கு அபராதம் விதிப்பதானால், ஒவ்

வொரு முத்தத்திற்கும் தம் காதலரிடமிருந்து எத்தனை பவுன் அபராதமிட்டுப் பறிக்கலாம்? போனால் போகட்டுமென்று முத்தமிடுவதையும் மன்னித்துவிடச் சிபார்சு செய்யலாம்! காதலர் தம் பற்களால் காதலிகளின் இதழ்களை எத்தனைமுறை கடித்துக் கடித்து காயமிடுவது? இதற்காவது காதலர்களிடம் அவ்விள நங்கையர் சிறிது பரபரப்புக் காட்டலாமல்லவா? அவர்கள் அப்பொழுதும் தடபுடல் செய்வதில்லை! இவ்வித அடக்கத்தால் அவர்கள் ஓசைப்படாது ஒரு வேலையை முடித்துக்கொள்ளுகின்றனர். அதுதான் அவர்கள் கணவனது மனம் போலிருந்து கொண்டு அவனைத் தமக்குத் தாசனாகச் செய்துகொண்டு விடுவது என்பதாம். பிரகல்பதை என்பது இவ்விதமான சமத்து நடக்கை என்பது கருத்து!

9. ஔதாரியம்

எட்டாவதில் சொன்ன சங்கதியையும் குணத்தையும் எல்லா மாதர்களும் எட்டிவிடலாம்! ஆனால், ஒன்பதாவது சங்கதி அப்படியல்ல! உதா: தனது காதலன் சக்களத்தியிடஞ்சென்று இன்புற்று வருவதை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கின்றாள்! அவன் அந்த பக்கமாகப் போன பொழுதே அந்தச் சங்கதி இவளது செவிக்கு எட்டிவிட்டது! அவன் திரும்பி வரும்பொழுதும் இவள் ஜன்னலின் வழியே தன் கண்ணால் பார்த்ததும் உண்மை. ஆயினும், இவள் அவன் வந்தபொழுது கடினமாக ஒரு சொற்கூட வழங்கவில்லை; புருவங்களை நெறிக்கவில்லை; புடவையின் முந்தானை நிலத்தில் புரள வீசி நடக்கவில்லை! ஆனால், இதனிடையில் ஒன்று நடந்துவிடுகின்றது!

அவளது தோழி வந்து பள்ளியறையின் ஜன்னலுக்கு வெளியே நின்ற வண்ணம் 'என்னடி தோழி! அவாள்

அங்கே போய் வந்தால் போலிருக்கிறதே!' என்று க்ஷேமம்-'கலக' விசாரணை செய்யும் பொழுதுதான் அவள் தன்னை யறியாது சிறிது கண்ணீர் விடுகின்றாள்! இம்மட்டிலும், "கணவனை மன்னித்துவிட்டது பெருந்தன்மைதான்" என்பதில் தடையுண்டோ? இந்த குணத்திற்குத்தான் பெருந்தன்மை அல்லது வினயமுடைமை. அல்லது அடக்க முடைமை என்று பேர்.

10. தைரியம்

இது கணவனைப் பிரிந்த காதலிக்கு இருக்கவேண்டிய அருங்குணம். ஒரு காதலி—தனது காதலன் பிற ஊர் சென்று பல நாளாகுங்கால், அப்பிரிவினையாற்றாது—விரகதாபஞ்சகியாது—சந்திரனை நோக்கிங் கூறுகின்றாள்:—

'சந்திரா! அமுத கிரணன் என்ற பொய்ப் பெயர் கொண்ட நீ, (ஆ! அது பொய்ப்பெயராம்! காமத்தணல் தாளாது வீணே திட்டுகின்றாள் பாவம் இப்பெண்மணி!) எனது காதலன் இல்லாத தருணங்கண்டு நீ ஒரு பக்கம் என் மீது தன் கிரணங்கொண்டு சுடுகின்றாய்! மன்மதன் மற்றோர் பக்கம் தனது மலரம்புகளையெல்லாம் கையில கொண்டு அவை ஓயும் வரை (ஓயாது!) ஓய்யார நடை நடந்து என் மீது எய்யாத பாணங்களில்லை! நீங்களிருவரும் செய்கின்ற வேலையினால் வேறு என்ன நிகழக்கூடும்! எனது உயிரைத்தான் மாய்க்காலாமல்லாது, நீங்கள் வேறு என்ன செய்வீர்? எனது முடிவை இப்பொழுதே கூறி விடுகிறேன். நீங்களிருவரும் கேளுங்கள்! 'எனது காதலன் ஒப்பற்றவன்; அருங்கலை வினோதன்! பெருங்குணமுடை யான்! புகழத்தக்கான்! எனது தாயும் நற்குலத்துதித்த நங்கை! எனது தந்தை ஏகதார விரதங்கொண்ட மேலோர்! என்றும் பிறழாத மனமுடையார்! நான் புகுந்த கணவனது

வம்சம் ஒப்பற்றது! 'ஆகவே, இந்த உயிர் ஒன்றையும் பொருட்படுத்துவதல்ல; உங்களது கருணையற்ற செயல்களால் மனம் மாறுபவளும் நானல்ல!'

11. லீலை

காத்திருந்து காத்திருந்து வெகு நேரமாகிவிடுகின்றது! காதலன் வருவதாகக் காணவில்லை. அப்பொழுது அவள் என் செய்வாள் பாவம்! தனது மனம் வினோதமாக இருக்கும் பொருட்டு ஒரு வேலை செய்கின்றாள். ஆம், காதலனைப்போல் வேஷமணிந்துகொண்டு கண்ணாடியின் முன்னே சென்று பார்க்கின்றாள்! நகைக்கின்றாள்! பேசுகின்றாள்! இந்த தமாஷான லீலையைப் பார்வதிதான் முதன் முதலில் செய்து பார்த்தாளாம்! அப்பொழுது சிவனார் எங்கு சென்றிருந்தார் என்ற கேள்வி எழலாம்! ஆம், சிவனார் இமயமலையில்தானிருந்தார் தவ வேடத்தில்! சிவன் மீது மலர் அம்புயெய்த அந்த மன்மதன், முதல் முதலில் பார்வதியின் மீது அந்த மலரம்புகளை யெய்த பின்னரே' அங்குச் சென்றானும்! அத்தருணத்தில்தான் போலும் பார்வதிக்கு மன்மத தாபம் அதிகமாகிவிடுகின்றது! 'தாமரைக் கொடிகளை எடுத்து, சிவனது கைகளிலுள்ள பாம்பு வளையங்களைப்போல் தனது கைகளில் அணிந்து கொள்ளுகின்றாள்! நீண்ட கருங்குழலால் (தலை முடியால்) சிவனைப்போல் சடைமுடி அமைத்துக் கொள்ளுகின்றாள்! அசல் சிவனைப்போல் நாமிருக்கின்றோமா என்று அடிக்கடி பார்த்துக்கொள்ளுகின்றாள்!......அந்த பார்வதி'—உலகின் தாய்—உலகினர்க்கு விரகதாபம் தோன்றி வாதியாதிருக்குமாறு பாதுகாப்பாளாக!' என்று வேண்டுகின்றார் ஒரு கவி!

பார்வதியினது இந்த முறையை கோபிகையரும் பின் பற்றித்தான் கண்ணனைப்போல் வேஷம் பூண்டு விரத வேதனையை வென்றனர் போலும்!

12. விலாசம்

அது என்ன தெரியுமா? காதலனைக் காணுங்கால் நடக்கும் ஒரு புதிய குஷி நடை! நிற்கும் 'ஜோரான' நிலை, இருக்கும் (சுதந்திர-தைரிய) இருப்பு குறிக்கும் கருத்து-முகக்குறிப்பு, காணுங் காதல் காட்சி முதலிய வற்றால் வெளிப்படும் செய்கைகள் விலாசங்களாகும்! இவை காதலி சுயமாகச் செய்பவையுமன்று; இவை யாவும் அவளது உள்ளத்தில் புகுந்திருக்கின்ற மன்மதனார் செய்விக்கும் திருவிளையாடல்களாம்!

13. விச்சித்தி

ஆடையாபரணங்கள் மிகவும் கொஞ்சமாகவே இருக்கின்றனவாயினும், அவை கூட அந்த அளவில் அதிக மாக சோபிக்குமானால், அதை விச்சித்தி என்னும் அழகு விலாசத்தில் சேர்ப்பர். அதோ பாருங்கள்! 'அந்தக் காதலி பரிசுத்தமான ஆற்று நீரில் நன்றாகக் குளித்திருக்கின்றாள்; எளிய விலையில் கிடைக்கும் சிறிய கலர்ப் புடவைதான் உடுத்தியிருக்கின்றாள்; நெற்றியில் ஒரு குங்குமப் பொட்டு மிட்டாள்; அழகிய ரோஜா மலர் கொண்டையை அலங்கரிக் கின்றது; நல்ல—அறுசுவை பொருந்திய-ஆரோக்கிய உணவு உண்ணப்பட்டது; அவளது இயற்கையான சிவந்த உதடு இப்பொழுது அவள் உட்கொண்ட தாம்பூலத்தால் இன்னும் சிறிது சிவக்கலாயிற்று' கோவைக் கனியைப் பழி வே போலும்! இம்மாதரசியின் இயற்கை யழகை இம்மட்டில் வருணித்துள்ளோம். இங்கு மன்மதனது சாந்நித்தியம்—

(அருள்) உண்டோ இல்லையோ என்ற சந்தேகம் யாருக்கும் எற்பட இடமில்லை! இனி நடக்கவேண்டிய விஷயம் திரை மறைவில் தானுதலால், வெளி வேலையில் நாமும் திரும்பி விடலாம்!

இயற்கை யழகும் தூய்மையும் நிறைந்த வனிதையருக்கு சிறிது ஆடையாபரணங்களே அமைந்திருப்பினும், அவை அழகு செய்து அழகும் பெற்றுக்கொள்ளுகின்றன! சில திருமேனிகளுக்கு விலையேறப்பெற்ற—மூட்டைக்கணக்கான ஆடையாபரணங்களைக்கொண்டு சுமத்தினுலும் அவை வெறும் சுமையாகவே விளங்குவதையுங் காண்கிறோம்! கணவனளிக்கும் ஆடையாபரணங்கள் மிக மிகச் சொற்ப மாயினும், அவைகளை அன்போடு எற்று, அவனது அன்பை அதனினும் பெரிதாகக்கொண்டு எளிமையிற் செம்மை வாழ்வு நடத்திக் களித்துவரும் சுந்தரிகளின் இயற்கையழகுச் செயல் விச்சித்தியாம்! இதை பட்டோஜி தீக்ஷிதர் என்னும் கவி வேறோர் வகையாக வருணிக்கின்றார். அதாவது: காதலன் செய்த எதோ ஒரு காரியத்தால் அவன் மீது பிணங்கியுள்ள காதலி அசூயையினுல், அழகிய ஆடைகளும் ஆபரணங் களும் வேண்டாமென்று ஒதுக்கி, தனித்திருக்குங்கால் அவளிடம் தோழியர் சென்று, கணவனளித்த—காதலன் தந்த—பொருளைச் சிறிதேனும் எற்று அணிந்து கொள்ள வேண்டுமென, வேண்ட அவள் அணிந்து கொள்ளுங்காலுண் டாகும் அழகுதான் 'விச்சித்தி' என்று! விச்சித்தி என்ற சொல்லின் பொருள் 'இடை பிரிதல்' என்பதே. இணை பிரியாது வாழுங் காதலனும் காதலியும் இடையிற் பிரிந்து வாழுங்கால் காணப்படும் பிரிவழகு—தாது—கூட்டுவிக்கும் தோழியர் பணி, கூட்டி வைக்கும் அணிகலன்கள் யாவும் காதலர் 'கூடு முகத்தால்' அழகு பெருகின்றன! எவ்வித

மேனும் காதலன் காதலி வாழ்வு சமாதானமானுலே போதுமானதென விரும்பும் நாம், இதில் அபிப்பிராய பேதங்கொள்ளக்காரணமில்லை!

14. பிம்போகம்

உண்மையாகக் காதலன் கொண்டு அளிக்கின்ற பொருள் தனக்கு மிகவும் விருப்பமுள்ளதுதான், என்றிருந்தாலும், அழகு மிகுந்த யௌவன கர்வத்தினுல், அதை வேண்டாமென்று ஒதுக்குதல்—தடுத்தல் 'பிம்போகம்' என்று கூறப்படுகின்றது. இதோ ஒரு காதலனைக் குறித்து அவனது உயிர்த்தோழன் செய்யும் ஆசிமொழியைப் பாருங்கள் :—

'உனது நற்குணங்களைப் பின்பற்றி நடந்துகொள்ளும் இயல்புள்ள நற்குணவதிகள் தானுயினும், எவர்கள் உன் மீது தோஷங்களையே (குற்றங்களையே) வேண்டுமென்று பிடிவாதமாகத் தேடுகின்றனரோ, எவர்கள் உனக்காகப் பிராணனைக்கூட அளிக்கத் தயாராக இருப்பினும் உன் மீது காதல் பார்வையை செலுத்தாதிருக்கின்றனரோ, எந்த வஸ்துக்களின் மீது அவர்களுக்கு மிக மிக விருப்ப மிருப்பினும், 'நீ அளிக்கின்ற காரணத்தால்' மறுக்கின்றனரோ அத்தகைய 'மூன்று உலகங்களிலும் காணப்படாத விசித்திர சுவாபம் வாய்ந்த' உனது பிணங்கிய காதலிகள் உன் மீது அனுக்கிரகஞ் செய்வாராக!' இந்த ஆசீர்வாதத்தை பெற்ற பிறகு காதலனின் குறைகள் யாவும் தீரக்கடவன

15. கிலகிஞ்சிதம்

காதலனை கண்டவுடன் அவன் தனது கையைப் பிடித்து இழுத்தல் தனக்கு இஷ்டமாயினும், அதில் விருப்ப மில்லாததுபோல் தடுத்தல், ஒரு இனிய புன் சிரிப்பு,

நடுவில் சிறிது மிரட்டல், அவன் செய்வதெல்லாம் தனக்கு இன்பமாயினும் ஒரு பொய் யழுகை-கண்ணில் தண்ணீர் வாரத வறட்டு அழுகை—இத்தனையும் 'மாயந்தானாயினும்' இதுவும் காதல் விளையாட்டாதலால், ஒரு அழகலங்கார மாயிற்று! இதன் நடுவில் பாட்டும் கூத்துங்கூடக் கலந்திருக்கும் என்றார் ஒரு ஸ்வாமி! (அவர் ஒரு நிகண்டு உரையாசிரியர்) கிலி என்பது கிரீடை செய்யுங்கால் மாதர்களின் குரலில் தோன்றும் இனிய ஓசையாம்! அது இந்த விளையாட்டின் இடையே தோன்றும் சப்தமாதலின், இதன் பெயரே கிலகிஞ்சிதம் என்றாயிற்றாம்!

16. மோட்டாயிதம்

நாட்டுப்புற வாசிகளான இள நங்கையர் நாலைந்து பேர்களாகவே தண்ணீர்க் குடங்கொண்டு, நீர் நிலையங்களாகிய குளங்குட்டை ஆறு ஏரி முதலியவைகளுக்குச்செல்வர். போகும்பொழுது தொடங்கிய ஊர் வம்பு-வீட்டு வம்பு தண்ணீர் மொண்டு தலையில் நீர்க்குடம் ஏறியவுடன், ஒரு 'கதம்பக் கதையாக' விரிந்துகொள்ளும்! இதனிடையில் பேச்சிலே சிறந்த ஒருத்தி மற்றொரு கதைசொல்லியாக மாறுவள்! அவளுக்கு இலக்கிய முறையில் நாம் ஒரு பெயரிடுவதானால், 'காதி' (கதை சொல்லி) என்று அழைக்கலாம்!

இந்த 'காதியை' தொடர்ந்தும் பக்கத்தில் சூழ்ந்தும் வருகின்ற ஒரு பெண் கூட்டத்தை இப்பொழுது நாமும் பின் தொடர்வோம்! இவள் ஒரு நல்ல கதை சொல்லுகின்றாள், கேளுங்கள்! அதில் புகழேந்தியின் பவழக்கொடி போல் மோனையும் எதுகையும் இலைமறை காய்போல் இங்குமங்கும் கலந்து கேட்கின்றது. இந்தக் காதி ஒரு வீட்டில் தாதி வேலை செய்பவளாம். இந்த 'தாதி' விளையாடி இரு கை வீசி வந்தாலும், 'இத்'தாதி மனம் நீர்க்குடத்தேதான்!

163120

இதுபோல் ஒரு இளங்காதலி தனது காதலனின் உருவத்தையே மனத்தில் நினைந்து அவனது அங்க-அவயவ-அழகுகளையே இடைவிடாது எண்ணிக்கொண்டிருக்கும் பொழுது, ஒருவர் அக்காதலனது கதையை வருணித்துக் கூறும் சந்தர்ப்பம் உண்டாக, அதனைக் கேட்கும்படி நேரிடுகின்றது! அதன் முடிவில் அவள் எதை எதையோ நினைந்து காதைச் சொரிகின்றாள்! விரல்களைச் சொடக்குகின்றாள்—நெட்டி முறிக்கின்றாள்! முடிவில் மெல்ல மெல்ல இந்த மன்மத சேஷ்டைகளையெல்லாம் காற்றின் வழியாகச் சிறிது மறைத்து விடலாமென்று கருதிக் கொட்டாவியும் விடுகின்றாள்!

இவை காம விலாசங்களைச் சார்ந்த 18 சேஷ்டைகளில் ஒன்றுதானாயினும், அந்த நிலைமையைக் குறிக்கும் சொல் மோட்டாயிதந்தான்! கொட்டாவியை முடிவு அடையாளமாகக்கொண்ட மன்மத சேஷ்டை மோட்டாயிதம்!

17. குட்டமிதம்

காதலன் செய்கின்ற செயல்கள்-சேஷ்டைகள் யாவும் இன்பமாகத்தானிருக்கின்றன! ஆயினும், அவள் அதைத் துன்பம் வந்த பொழுது செய்யும்—அநுஷ்டிக்கும் உபசாரத்தைப்போலும் நடிக்கின்றாளாம்.

சிறிது யோசித்துப் பாருங்கள், காதலன் என்ன செய்கின்றான் என்று! அவனது ஒரு கை அவளது கூந்தலை அன்போடு அணைத்திருக்கின்றது! மற்றொரு கை அவளது இடக்கையைப்பற்றிக் கொள்ளுகின்றது: அத்தருணத்தில் வண்டு மலர்த்தேனைப் பருகுவதுபோலும் அவன் காதலியினது இதழோடு இதழ் வைத்துத்தான் அமுதபானஞ் செய்கின்றான்! இவை யாவும் காதலிக்குச் சந்தோஷத்தை

பளிக்கின்றனவாயினும், அவள் ஏதோ பரபரப்புக்கொண்டு தலையையும் கையையும் குடைந்து கொள்ளுகின்றாள்! இதை மாககவி என்பவர் எங்கோ மறைந்திருந்து எவ்வாறோ ஒரு முறை பார்த்தாராம்! அவர் கூறுகின்றார்:—

'தனது காதலியினது இளந்தளிர் போன்ற இதழை அவன் அன்போடு—ஆசையோடு—கடித்ததென்னமோ உண்மைதான்! அதைக்கண்ட அவளது பொன் வளைக் கை தனது தோழியை ஒருவன் கடித்த வேதனையைதான் கண்டு சகியாததுபோலும்' கலகலவென்று ஒலித்தலாகிய சப்தமிடும் வேலையைச் செய்து காட்டியதாம்! இந்தக் குரலைக்கேட்டுத்தான் மாககவி விழித்தார் போலும்!

இதழுக்கு 'கை' தோழி முறையாம்! இதை நாமும் தெரிந்து கொண்டிருப்பது நல்லதே!

18. விப்பிரமம்

காதலன் அன்று மாலை வண்டியிலேயே திடீரென்று வந்து சேர்ந்தான்! அந்த தடபுடலில்–சந்தோஷத்தில்–ஆசையில்-எப்படி எப்படியோ அணிந்துகொள்ளவேண்டிய ஆடையாபரணங்களை அவள் எப்படி எப்படியோ மாற்றி அணிந்து கொண்டாளாம். அந்தப் பரபரப்பில் அவள் அப்படித்தான் செய்யமுடியும்! வேண்டுமானால் அதையும் விவரித்து விடுவோம்!

அவள் மன்மத மனோஹரச் சுகந்த சிங்காரப்பொடி தேய்த்துக் குளித்து, பூனு ரோஸ் பட்டுப் புடவை பாதி கட்டிக்கொண்டிருக்கும்பொழுதே, வீட்டு வாயிலில் வந்து இறங்கிய அவளுடைய காதலனது இனிய (நல்) வரவுக் குரல் செவியிலே வந்து புகுந்து கொண்டது! என்

செய்வாள் பாவம்? அப்படியே அந்த அழகான ஜரிகைப் புடவையை முந்தானை மாற்றிக் கட்டிக்கொண்டுவிட்டாள்! கண்ணுக்கு எழுதவேண்டிய மை நெற்றியில் போய் அமர்ந்து கொண்டது 'என்பதை பார்க்கினும்' அது நெற்றியிலிடப் பட்டது, என்பதே உண்மை! செம்பஞ்சுக்குழம்புச்சாயம் அணியும் யோகம் இரண்டு கண்களுக்கும் கிடைத்தது! இரண்டு கன்னங்களிலும் குங்குமப் பொட்டுகள் ஒளி வீசுகின்றன! அதனால்தான் இந்த அலங்காரத்தின் பெயரே பரபரப்பலங்காரம் என்று அமைந்தது. கண்ணும் காலும் கூடத் தெரியாத பரபரப்பு 'இந்த சம்பிரமத்தை' விப்பிரமம்-பரபரப்பு என்றுதானே கொள்ளவேண்டும்?

19. லலிதம் அல்லது லளிதம்

அழகிய மாதர்கள் தமது அங்கங்களை அழகாக வைத்து நிற்கும் மனோஹர நிலை லளிதமெனப்படும்.

காதலனது முன்னிலையில் அவள் மிக ஜாக்ரதையாகவும் அழகாகவும் நடந்து கொள்ளுகின்றாள்! அவள் காலடியைத் தூக்கி வைக்கும்பொழுது காலில் அணிந்த பாதசரச் சதங்கை "கலீர் கலீர்" என்று ஒலிக்கின்றது. இடுப்பில் கை வைத்து நிற்கும்பொழுது அவளது சிறு வயிற்றின் மூன்று மடிப்பும் மன்மத ஆலயத்தினது மூன்று மேல் மாளிகை போல் விளங்குகின்றது! மார்பின் நடுவில் அந்த முத்துப் பொன் மாலை அசையும்பொழுது, அது அவளுடைய அழகிய மொட்டுப்போன்ற சொங்கைகளின் பருமனை இருபங்காக அளந்து காட்டுகின்றது! அவள் துவண்டு நிற்கும்பொழுது அந்த தோடும் லோலக்கும் தாமும் துவண்டு நின்று, அவளது அழகோடு போட்டி போடுகின்றன! (ஏன்? மினுக்கி மினுக்கித் தோல்வியடைகின்றன!)

இங்கிலையில் அவள் சிறிது சாய்ந்த புருவங்களோடு அவன் மீது ஒரு காதற் பார்வையும் செலுத்துகின்ருள்! இந்த முன்னேற்பாடுகள் நடந்து பூர்த்தியானவுடன், 'கணீர், கணீர்' என்ற ஓசை முழங்க, வலது கால் முன்னே செல்கின்றது. இடது பாதமும் அதைத்தொடர்ந்து இனிது நடக்கின்றது. இவ்வாறு மெல்ல மன்மதனை ஆகர்ஷணஞ் செய்தவள்போலும் அவள் நடந்து உள்ளே சென்ருள். இது லளிதம்! (இது மனேஹரமல்லவா?)

20. மதம்

காதலன் தன் மீது கொண்டுள்ள ஆசை காரணமாக உண்டாகும் யௌவனச் சந்தோஷ இறுமாப்பு! இது வெளிப்படையான சங்கதி. இளம்பெண்களான யுவதிகளிடம் குடி புகுந்த இந்த உணர்ச்சி அவரது நடையில் அரும்பும்! உடையில் மலரும்! பேச்சில் உதிரும்!

21. விஹ்ருதம்

மறுமொழி கூறவேண்டிய தருணத்தில் வெட்கங் காரணமாக மறுமொழி கூருதிருத்தல் 'விஹிருதம்' எனப் படும். காதலன் வெகுதூரம் யாத்திரை செய்து அப்பொழுது தான் வந்தான். 'என்னுயிர்ச் செல்வமே! சுகமாயிருக்கின்றனையா!' எனக் கேட்கின்ருன். அன்பன் அது கேட்கும் போது 'அவள் வெட்கி' மௌனமானுள்! ஆனல், அவளது கண்களிரண்டும் வெந்நீருகுத்து, யாவும் விளங்கக் கூறி விடுகின்றன!

22. தபனம்

ஏதோ ஒரு வேலை காரணமாகக் காதலன் பிரிந்து விடுகின்ருன். விரகதாபம் அதிகமாகின்றது. அப்போது காம ஆவேசத்தால் அவள் செய்யும் செயல்-தவிக்கும்

நிலை—தபனமெனப்படும். அவ்வித சேஷ்டைகளை ஒரு காதலி செய்யும்பொழுது, அவளது விரக நிலையைக் கண்டு மனந் தாளாத தோழி 'அக்காதலியினது காதலனிடஞ் சென்று' அவளது நிலையை வருணிக்கின்றாள் :—

'நான் அவளது நிலையை என்னென்பது? அவள் பெருமூச்சு விடுகின்றாள்! நிலத்தில் கிடந்து கடகடவென்று புரளுகின்றாள்! வருவாய், வருவாய் என்று வழி வழியை விழித்துப் பார்க்கின்றாள்! நடுவிலே பெரிய ரோதனமும் (அழ குரலிடவும்) செய்கின்றாள்! இளைத்த கொடி போன்ற தனது கைகளைக் கீழே தட்டுகின்றாள்! உனது உயிர்த் தோழியான அவள் கனவிற்கூட உன்னைக்கூடி சுகிக்க வேண்டும் என்று ஆசை கொள்ளவில்லை! ஆனால், மெய்ம் மறந்து நித்திரை செய்ய (தூங்க)த்தான் விரும்புகின்றாள்! அந்தப் படுபாவி பிரம்மதேவன் அவளுக்குத் தூக்கத்தைப் படைத்தானில்லை! சகுந்தலை துஷ்யந்த மன்னனைப் பிரிந்த காலத்தில், வெயிலில் பட்ட 'தாமரைக் கொடிபோல்' அவள் வருந்திய நிலையை அந்த ரவிவர்மாதான் எழுதிக் காட்ட வியலும்! காளிதாஸ கவியரசே அதை வருணித்தலும் சாத்தியமாம்!

23. மௌக்த்யம்

சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த ஒரு வஸ்துவைக் குறித்து, 'அது தனக்கு தெரிந்திருந்தும்' தெரியாதது போல காதலியிடங் கேட்பது மௌக்த்யம் எனப்படும். முத்துமணிகள் கடலில் வாழ்கின்ற சிப்பிகளிலிருந்தும் எடுக்கப்படுகின்றன என்பது அவளுக்குத் தெரிந்திருந்தும், காதலனை நோக்கி, 'ஒன்றும் அறியாதவள் போல' அன்றிரவிலே கேட்கின்றாள்!

'இவை (இந்த முத்துக்கள்) எந்த மரத்தின் காய்கள்? அந்த மரங்கள் எந்தத் திக்கிலிருக்கின்றன? அதை நட்டு வளர்த்தது யார்? அது எப்போது காய்க்கும்?' அந்த யுவதியின் இந்தத் தமாஷான கேள்வி யழகு முத்துப்போல் விளங்கின்றதல்லவா?

24. விக்ஷேபம்.

காதலன் கூடத்தானிருக்கின்றான். தனது அலங்கார வேலைகளைப் பூர்த்தி செய்து கொள்கின்றாளில்லை! பாதி கூந்தல் வாரி முடியிட்டிருக்கின்றாள். பறித்த மல்லிகை மலர் அப்படியே எதிரில் கிடக்கின்றது! இடையிடையே அவசியமில்லாத சிரிப்பு! அடிக்கடிக் காதலன் மீது கடாக்ஷிக்கின்றாள். பட்டிக்காட்டுப் பச்சைத் தமிழில் சொல்லுகிறதென்றால், காதலனைக் கண்ணடிக்கின்றாள், என்றே சொல்ல வேண்டும்! என்? அவனை நோக்கி ஏதோ ரகசியஞ் சொல்ல தொடங்குகின்றாள் போலும்; ஆம், ஏதோ காதலன் காதில் படுகின்றது! அதொரு ரசமான செய்திதான். அவனும் அவளை உற்று நோக்குகின்றான்! தலை முடியைப் பாதியில் நிறுத்தியதுபோல், இந்தச் சங்கதியையும் பாதியில் நிறுத்தி விடுகின்றாள்! அவள் சொல்லவந்த வார்த்தைகளையேனும் முழுதும் அறிந்துகொள்ளலாம் என்றால்—அவள் பாதிப் பதங்களையும்—வார்த்தைகளையும்—எழுத்துக்களையும் அப்படியப்படியே ஜாடை காட்டி சுருக்கி விடுகின்றாளே! என் செய்வது? இங்கு ஊகித்துக்கொள்வேண்டிய விஷயம் மிக்க ரசமானது!

இவ்விதத் தமாஷான சிங்கார லீலா விசேஷத்திற்கு விக்ஷேபம் (வி + க்ஷேபம்: விட்டுவிட்டுத் தோன்றும் அழகலங்காரம்) என்று பேராம்!

25. குதூஹலம்.

இதைக் கேட்கும்போது நமக்கும் குதூஹலமாகத் தானிருக்கிறது. இதை முழுதுங் கவனிப்போம். அழகான வஸ்துக்களைப் பார்ப்பதிலுள்ள ஆசைக்கு குதூஹல மென்று பெயர். அரச குமாரனாகிய ‘அஜன்’ ‘சுயம்வர’ முறையில் இந்துமதியை மணந்து கல்யாண கோலத்துடன் நகர் வலம் வருகின்றான். அத்தருணத்தில் ஒரு யௌவனப் பெண் தனது ஒரு காலிலே தோழி பாதியிட்டுக்கொண்டிருக்கின்ற அலங்கார அரக்குச் சாயம் நிலத்தில் சொட்டச் சொட்ட அந்த ஒற்றைக் காலோடு கூடம் முழுதும் சாயக் குறி தோன்ற, வாயல் ஜன்னல் வரை ஓடிவந்து அவ்வாலிப அரசு குமாரனைக் குதூகலத்தோடு காண்கின்றாளாம்! (காலுக்கு அரக்குச் சாயமிடுவது முற்கால விதர்ப்ப நாட்டு மங்கையரசிக்கு வழக்கம்போலும்! இப்பொழுதும் வங்காளத்தில் வழங்குவது போல)

26. ஹஸிதம்.

நல்ல யௌவனப் பருவ அழகு வளர்ந்து, முதிர்ந்து கட்டுக்கடங்காத நிலையில் வந்தவுடன் என்ன செய்யும் தெரியுமா? அது காதலனை நோக்கி ஒரு சிரிப்பாக வெளியே வந்துவிடுவதுண்டு! அந்த சேஷ்டைதான் இது! ஹஸிதம் :— என்றால் சிரிப்புத்தானே! அந்த அழகான புன் முறுவலைக் கண்டு எந்த ரசிகனேனும் நாக்குமேல் பல் போட்டு, இப்பொழுது என்ன காரணத்திற்காகச் சிரித்தாய்! என்று கேட்கத் துணிவானா? ஒரு இளங் கொடியாள் அகஸ்மாத்தாக யாதொரு காரணமும் இன்றி தன்னைப்பார்த்து ‘அன்புடையனைத்தான்’ புன்னகை செய்வாளாயின், விலை மதிக்கமுடியாத அந்த நகையைக் கொண்டு நாம் ஊகிக்கவேண்டியதென்ன? அங்கே (அவ்

வணங்கினிடம்) மன்மதன் தனது ஐந்து அம்புகளும் வில்லுந் தாங்கிச் செங்கோல் செலுத்துகின்ருன் என்று தெரிந்து கொள்ளலாம். மும்மூர்த்திகளையும் வென்ற அக்கரும்பு வில்லன் முன் எதிர்த்துப் பேச எவராலாகும்? சிவன்கூட ஏதோ தெரியாத்தனமாக அவனை முதலில் எதிர்த்துவிட்டு, அப்பால் அவனை எதிர்த்ததற்காக நிரந்தர மன்னிப்புக் கேட்பர்போல் தமது காதலியைத் தமது சரீர முழுவதிலும் ஒரு பாதியில் சதா காலமும் வசித்து வருமாறு இடங் கொடுத்துவிட்டார்! இந்த, அவரது செய்கையைக் கண்டு நீங்களும் சிரிக்கத்தானே செய்கிறீர்கள்! அதனுல்தான் இந்த அலங்காரம்-சிரிப்பலங்காரம் என்றே தன் பெயரையும் வைத்துக்கொண்டது!

27. சகிதம்.

சகிதம் என்ருல் என்ன? கேட்கும்போதே பயமாயிருக் கின்றதே! ரஸிக வாசகர்கள் கேட்கலாம். ஆம், சகிதம் என்ருல் நடுக்கந்தான்! அப்படியானுல், நடுங்கவேண்டிய விஷயம் என்ன வந்துவிட்டது என்று கேட்கின்றீர்கள்? இக்காதலர் கதையைக் கேளுங்கள்! தனது உள்ளத்தைக் கொள்ளைகொண்ட காதலன் கிடைத்துவிட்ட மணமும் முடிந்த காதலன் விட்டுப் பிரியவில்லை. தொடையோடு தொடையாக அவளையடுத்துத்தானிருக்கின்ருன். அத் தருணத்தில் அகாரணமான அவளது அழகிய தொடை களிரண்டும் நடுங்குகின்றன! சுந்தரிகளுக்கு அதுகூட ஒரு சிங்கார லீலையாம்! இதனுல் காரணம் இல்லாமலும் நடுங்கும் பருவ மங்கையரிருக்கின்றனர் என்று தெரிகின்றது! ஆனுல் அது வெறுந் தமாஷான நடுக்கம்!

28. கேளி.

விளையாடுதல், க்ரீடித்தல், களித்தல் என்பது இதன் பொருள். காதலனேடு ஏகாந்தத்தில் விளையாடும்

காதலி அவ்விளையாட்டுக்களில், தனது விசேஷத் திறமையைக் காட்டுதல் கேளியாம்! (கேலி அல்ல!) உதாரணம்:— காதலன் ஏகாந்தத்தில் ஒரு மல்லிகைப் பூச்செண்டை எடுத்துத் தனது காதலியின் மீது எய்து கின்றான்! அப்பூச்செண்டு கீழே வீழ்கின்றதாயினும், அதன் இதழ் ஒன்று காதலியின் கொங்கையில் ஒட்டிக் கொண்டு நிற்கின்றது! காதலி அந்த மலர்த்தூளின் மீது தனது கண்களைச் செலுத்தி, தனது மூச்சுக் காற்றுகளால் அதனை மெல்ல ஊதித்தள்ளிவிடப் பார்க்கின்றாள்! இந்த முயற்சியினால் அந்த பூந் தாது கீழே விழுவதாக இல்லை! பக்கத்திலிருக்கின்ற காதலனது மார்பில் அவ்வமுதக் கொங்கையை ஒரு உரசு உரசி மலர்த்தூளைக் கீழே வீழ்த்து கின்றாள்! இங்கு காதலன் செய்த கேளியில்—விளையாட்டில் அவன் மலர்ச்செண்டையெய்து, 'அது போல் மன்மதன் தன் மீது மலரம்பு எய்துகின்றான்' என்று உணர்த்திய ஒரு குறிப்பு மாத்திரம் விளங்கியது: அந்த விளையாட்டுக்கு பதில் விளையாட்டாக இக்காதலி விளையாடிய கேளியில இரண்டு குறிப்பும் (ஏன்?) மூன்று நான்கு விதக் குறிப்புங் கூட அடங்கியிருக்கின்றன.

காதலி முதலில் தனது கண்களால் கொங்கையை நோக்கியது, அந்த மன்மத வேதனையைப் போக்க இதோ இந்த அமுதக் கொங்கைகளிரண்டும் தயாராக இருக் கின்றன, என்பது முதல் குறிப்பாம்!

மன்மதனுக்கு மலர்ப் பூஜை ஆகிவிட்டதல்லவா? இனி, இங்கு (இந்தப் பிரசாதம் பெற்றுக்கொள்ளலாமே என்பது, பெரு மூச்சினால் அவள் குறித்த இரண்டாவது குறிப்பு!)

காற்றினால் ஊதிக்கொண்டிருந்தால் காலமல்லவோ போகின்றது? இதோ இவ்விரண்டையும் பற்றிக்கொண்டு எனது கவலையைக் கூட தீருங்கள் என்பது மூன்றாவது குறிப்பு.

நான்காவது குறிப்பு: இத்தகைய ஏகாந்த சமயத்தில் கூட எனது அனுமதியைக் கோரவேண்டிய அவசியமென்ன? என்ற கருத்து காதலனது மனதில் பதியுமாறு செய்யும் ஜாடைதான் அவனை சுவாதீனத்தோடு முட்டியதாம்! இவை 28 அலங்காரங்கள், சிங்கார சேஷ்டைகள்; காதலர் தம்முள் பேசிக்கொள்ளும் இன்ப பாஷைகள்! இனி, இது போன்ற பச்சையலங்காரங்களை அடுத்து ஆராய்வோம்.

பாவம், ஹாவம், ஹேலை, சோபை, காந்தி, தீப்தி, மாதுரியம், ப்ரகல்பதை, ஔதாரியம், தைரியம் என்ற பத்தும் ஆண்களுக்குக்கூட உண்டாகும் அழகு சேஷ்டைகளென்றும், பிற 18ம் பெண்களுக்கு மாத்திரம் தோன்றும் இயல்பின என்றும், அலங்கார சாஸ்திரம் அளந்து பேசுகின்றது. அழகின் செல்வியான அரசகுமாரி இந்துமதியை சுயம்வர மண்டபத்தில் கண்டபொழுது அங்கு வந்திருந்த இளவரசர்களுக்கெல்லாம் 'மரம் தளிர்ப்பது போல மன்மத சேஷ்டைகள் தளிர்விட்டன!' எனவும் காளிதாஸ கவி வருணிக்கின்றார். புருஷர்களுக்கு உண்டாகும் சிங்கார வெளி சேஷ்டைகளுக்கு அது ஒரு உதாரணமொழி. ஆண்களின் சேஷ்டைகளுக்கு அது ஒரு ஊக வழி!

வேலூர் பிரின்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், வேலூர். 1-8-50.